# உடன்பிறப்பே... 87

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த த.வேணுகோபால் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**




## த.வேணுகோபால் “திராவிடப் பட்டறையின் தீரர்!”

“இன, மான, மொழியுணர்வோடு திராவிட இயக்கப் பட்டறையில் வார்ப்பிக்கப்பட்ட கொள்கைத் தீரர். அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற ஆற்றல்மிகு செயல்வீரர்” இது, பவளவிழா காணும் கழகத்தின் இன்றைய தலைவர் அவர்கள், கழகத்தின் முன்னோடி - திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக 35 ஆண்டுகளுக்கு மேல் பொறுப்பு வகித்து, கழக உடன்பிறப்புகளோடு பாசத்துடன் பயணித்த த.வேணுகோபால் குறித்துப் பெருமையுடன் கூறியவை.

முத்தமிழறிஞர் கலைஞரின் வழிகாட்டலில், 8 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகவும், 18 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றி பழுத்த அனுபவம் பெற்றவர். அவரது கொள்கைப் பற்றுக்கும், கழகப் பணிகளுக்கும் பெருமை சேர்க்கும் மகுடமாக 2019-ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில் ‘பெரியார் விருது’ பெற்ற பேராளர், கலைஞரின் அன்பு உடன்பிறப்பு த.வேணுகோபால்.

திருவண்ணாமலை மாவட்டம், காட்டாம் பூண்டி என்கிற கிராமத்தில், 1936-ஆம் ஆண்டு, நவம்பர் 11-ஆம் தேதி பிறந்தவர் வேணுகோபால். பெற்றோர் தனபால் - தனபாக்கியம். நடுத்தர விவசாயக் குடும்பம். அதனால், அன்றைய காலச் சூழலில் பள்ளிப் படிப்புக்கு மேல் கற்கும் சூழல் வேணுகோபாலுக்கு வாய்க்கவில்லை. ஆனால், அரசியல் களம் அவருக்குப் பல பாடங்களைக் கற்பித்தது.

### மக்களிடம் செல்வாக்கு

வேணுகோபால் தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்தார். 1960-ஆம் ஆண்டு, 24 வயது வயதில், அவர் பிறந்த கிராமமான காட்டாம்பூண்டியின், ஊராட்சி மன்றத் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றைய வட ஆற்காடு பகுதிகள் முழுவதும் கழகத்தின் செல்வாக்கு நிலவிய நிலையில், தனது சொந்தச் செல்வாக்கில் மக்களின் நம்பிக்கையைப் பெற்று வேணுகோபால், அதற்கடுத்த உள்ளாட்சித் தேர்தலிலும் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்வானார்.

1970-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலராக வெற்றி பெற்றிருந்தார் வேணுகோபால். அப்போது உள்ளாட்சி மற்றும் உணவுத்துறை அமைச்சராக இருந்த கழக முன்னோடி ப.உ.சண்முகம் அவர்கள், வேணுகோபாலைக் கழகத்துக்குக் கொண்டு வந்துடன், அவரை திருவண்ணாமலை ஒன்றியப் பெருந்தலைவராக வெற்றிபெற வைத்து கலைஞரிடம் சேர்த்தார். வேணு கோபாலின் வருகை, திருவண்ணாமலை மாவட்டக் கழகத்துக்கு புதிய ஊட்டத்தை அளித்தது என்கின்றனர், கழக வரலாறு அறிந்தவர்கள்.

வேணுகோபால் மீது கலைஞர் வைத்த நம்பிக்கை, கழகத்தின் வளர்ச்சியாக வெளிப் பட்டது. 1975-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின் போதும் வெற்றிபெற்று, திருவண்ணா மலை ஒன்றியப் பெருந்தலைவராக மக்கள் பணியாற்றினார்.

### வெற்றி வேட்பாளராக..

1977-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல், கழகத்துக்கு மிக முக்கியப் போராட்டக் களம். தண்டராம்பட்டுத் தொகுதியின் வேட்பாளராக வேணுகோபால் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கினார் கலைஞர். கழகத்தின் பெரும்பாலான வேட்பாளர்கள் தோல்வி முகம் கண்ட நிலையில், தண்டராம்பட்டுத் தொகுதியில் இருந்து சட்டமன்றத்துக்குத் தேர்வானார் வேணுகோபால். அதேபோல 1980-ஆம் ஆண்டு அலையிலும் அதே தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்து மீண்டும் வெற்றிபெற்றது, கலைஞரின் கரங்களில் ஆறுதல் பரிசாக அமைந்தது எனலாம். ஆனால், 1984-ஆம் ஆண்டிலும் அதே தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

அதன்பின்னர், நாடாளுமன்றக் களத்துக்கு அவரைத் தயார் செய்த கலைஞர், 1991-ஆம் ஆண்டு வந்தவாசி தொகுதியில் நிறுத்தினார். அந்தத் தேர்தலில் வெற்றிபெறவில்லை என்றாலும், 1996, 1998, 1999, 2004-ஆம் ஆண்டுகளில் திருப்பத்தூர் தொகுதியில் இருந்தும், 2009-ஆம் ஆண்டு திருவண்ணாமலை தொகுதியில் இருந்தும் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றார். தொடர்ந்து 5 முறை மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென்ற வேணுகோபால், கழகத்தின் குரலாக, கலைஞரின் குரலாகத் தொடர்ந்து ஒலித்தார்.

2009-ஆம் ஆண்டு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் காடுவெட்டி குருவை, தமிழ்நாட்டி லேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

**அவரது இழப்பு கழகத்துக்குப் பேரிழப்பு. ஆனால், அவரது நினைவுகள் கழகக் கொடியாக என்றென்றைக்கும் திருவண்ணாமலையில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும்.**

### மக்களுடன் மக்களாக

தனது பணிக்காலம் முழுவதும் தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட உழைக்கும் மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தவர் த.வேணுகோபால். சட்டமன்ற உறுப்பினராக இருந்தது வரை, சொந்தமாக கார் கூட வாங்கிக் கொள்ளவில்லை. எங்கு சென்றாலும் பொதுப்பேருந்துப் பயணம்தான். தனது சொந்த ஊரான காட்டாம்பூண்டியில் இருந்து, தினமும் பேருந்தில்தான் திருவண்ணா மலைக்கு வந்து செல்வார்.

சட்டமன்றம், நாடாளுமன்றம் இல்லாத நாட்களில் காட்டாம்பூண்டியில் இருந்தால், சாதாரணமாக காலை, மாலை நேரங்களில் தேநீர் கடையில் அவரைப் பார்க்க முடியும். கட்சியினர், பொதுமக்கள் எனப் பலரோடும் அணுக்கமாக உரையாடிக் கொண்டிருப்பார். திருவண்ணாமலையில் உள்ள வீட்டுக்கு வந்தபின் அனைவராலும் மிக எளிதாக சந்திக்கக் கூடியவராக இருந்தார். எளிமையானவர், அமைதியானவர் என்கின்றனர் மாவட்டக் கழகத்தினர். ஆனால், கொள்கையில் வலிமையானவர். அதனால்தான் 2019-ஆம் ஆண்டு ‘பெரியார் விருது’ வழங்கி அவருக்குப் பெருமை சேர்த்தது தலைமைக் கழகம்.

### கிராமங்களுக்கு சாலை வசதி

வேணுகோபால் ஒன்றியப் பெருந்தலைவராகப் பதவி வகித்த காலத்தில், திருவண்ணா மலை ஒன்றியத்தில் பல கிராமங்களுக்கு தார்ச்சாலை அமைத்தார். கிராமங்களுக்கு இடையிலான இணைப்புச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளோடு கிராமச் சாலைகள் இணைப்பு எனப் பல வசதிகளை உருவாக்கினார். ஒற்றையடிப் பாதைகள் மட்டுமே கொண்ட பல கிராமங்களுக்கு, சாலை வசதி உருவாக்கிக் கொடுக்கக் காரணமாக இருந்தவர், வேணுகோபால் என இன்றைக்கும் அவர் பெயர் நிலைத்து நிற்கிறது.

தன்னுடைய நிர்வாகப் பகுதிகளில் உள்ள ஊராட்சிகளில் தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கியிருக்கிறார். பல பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக அவரது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி, திருவண்ணா மலை, செங்கம், கீழ்ப்பென்னாத்தூர் தொகுதி களில் பள்ளிக்கூடம், குடிநீர் மேல்நிலைத்தொட்டி ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கி பணிகள் நடைபெற்றதை அந்தந்த கிராமங்களில் உள்ள கல்வெட்டுகள் காலத்துக்கும் சொல்லும்.

### ‘பதவிக்காக மாறுபவனல்ல’

வேணுகோபாலைக் கழகத்துக்குக் கொண்டு வந்த முன்னோடி, கழகத்தில் வலிமைமிக்கவராக இருந்த ப.உ.சண்முகம் அவர்கள், எம்.ஜி.ஆரின் தலைமையை ஏற்றபோது, வேணு கோபாலையும் தன்னுடன் வருமாறு அழைத்துள்ளார். ஆனால், கழகத்துக்குப் பதவிக்காக வந்தவனில்லை என மறுத்து, அவர் கழகத்தைவிட்டுச் செல்ல மறுத்தார். அதேபோல, 1993-ஆம் ஆண்டு கட்சிப் பிளவின்போதும் கலைஞரின் தலைமைக்கு எதிராக அணி திரட்டப்பட்டபோது, தென்னாற்காடு மாவட்டத்தில் வலிமையாக இருந்த செஞ்சி ராமச்சந்திரன் அவரை அழைத்துள்ளார். அப்போதும் வேணுகோபால், “பதவிக்காக நான் கட்சி மாறுபவனல்ல” என்கிற அதே பதிலைத்தான் சொன்னார்.

அந்த உணர்வுதான் அவரது இறுதிக்காலம் வரை அவரை இயக்கியது. தனது இறுதிக் காலங்களில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத் தலைவராகப் பொறுப்பேற்று இளைஞர்களை வழிநடத்திக் கொண்டிருந்த வேணுகோபால், 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று, தனது 87-வது வயதில் வயதுமூப்பு காரணமாக இயற்கை எய்தினார். அவரது இழப்பு கழகத்துக்குப் பேரிழப்பு. ஆனால், அவரது நினைவுகள் கழகக் கொடியாக என்றென்றைக்கும் திருவண்ணாமலையில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும்.

**...துடிக்கும்**

## உணவு உரிமையை யார் தீர்மானிப்பது?

அசாம் மாநிலத்தில் உணவகங்கள், விடுதிகள், பொது இடங்கள் எங்குமே மாட்டிறைச்சி சமைக்கவோ, பரிமாறவோ கூடாது என்று அம்மாநில பா.ஜ.க. அரசு தடை விதித்துள்ளது. இது கால்நடைகள் மீது பா.ஜ.க. கொண்டிருக்கும் அக்கறை அல்ல. கால்நடைகளைப் பொறுத்தவரையில் பால் உள்ளிட்ட பயன்பாடு சார்ந்த கட்டத்தைத் தாண்டியவுடன், அவற்றால் விவசாயிகளுக்கு லாபம் கிடையாது. மாறாகப் பராமரிப்புச் செலவு பன்மடங்கு கூடிவிடும். அதற்காகத்தான் இறைச்சிக்காக அவற்றை விற்று விடுகிறார்கள். இறைச்சிக்காக விற்கக்கூடாது என்ற கட்டாயம் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஏற்படும்போது, அவற்றை மாடுகளைப் பராமரிக்கும் ‘கோசாலை’களுக்கு அனுப்புவதுதான் சாமானியர்களுக்கு இருக்கும் ஒரே வழி.

ஆனால், மாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் பல ‘கோசாலை’களில் உணவளித்துப் பராமரிக்க முடியாத நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. மத்தியப் பிரதேச மாநிலம் சாலையா என்ற பகுதியில், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சுமார் 40 மாடுகள் உணவுப் பற்றாக்குறையால் இறந்துள்ளன. 125 மாடுகள் நலிந்துபோன நிலையில், வேறு கோசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. உத்தரகாண்ட் மாநிலம் ரூர்க்கில் உள்ள கோசாலையில் அக்டோபர் மாத இறுதியில் ஒரே வாரத்தில் 19 மாடுகள் உயிரிழந்தன. உத்தரப் பிரதேசத்தில் உணவு இல்லாமல் சாலைகளில் திரிந்து விபத்துக்குள்ளாகி மாடுகள் இறந்த செய்திகள் வெளியாகின. இப்படி பல செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, இந்தியாவில் மாட்டிறைச்சி உணவுக்கு எதிராக பொங்கும் மத அடிப்படைவாதிகள், மாட்டிறைச்சி ஏற்றுமதி குறித்துப் பேசுவதே இல்லை. பசுப் பாதுகாப்பு என்கிற பெயரில் வெறுப்பை விதைக்கும் மத அடிப்படைவாதிகளை உணவு உரிமையிலும் புறக்கணிப்பதே, அமைதியான இந்தியாவுக்கான வழியாக இருக்கும்.

## :ப்ளாஷ்பேக்



### இசை முரசு’ ஹனிபாவுக்கு வாக்கு சேகரித்த தலைவர்!



மு.அப்துல் அலி

2002-ஆம் ஆண்டு, ஆம்பூர், வாணியம்பாடி ஒருங்கிணைந்த தொகுதியாக இருந்தபோது அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் எம்.அப்துல் லத்தீப் மறைவைத் தொடர்ந்து, இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. கழகத்தின் சார்பில், ‘இசை முரசு’ நாகூர் ஹனிபா வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இசை முரசு அவர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தபோது, மேடையில் தலைவரின் அருகாமையில் அமரும் வாய்ப்பு கிடைத்தது. இன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, தேசிய லீக் தலைவர் அப்துல் ஜபார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**– மு.அப்துல் அலி, வட்டக் கழகச் செயலாளர், ஆம்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### போட்டி அமைப்பு!

1944-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில் ‘ஜஸ்டிஸ் கட்சி’, ‘திராவிடர் கழகம்’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த மாநாட்டில்தான் திராவிடர் கழகத்தினர் பட்டம் பதவிகளை ஏற்கக்கூடாது. ஏற்கெனவே பெற்ற பட்டத்தைத் துறக்க வேண்டும். ‘தேர்தலில் நிற்கக்கூடாது’ என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதை ஏற்றுக்கொள்ள முடியாத டபிள்யூ.பி.ஏ.சவுந்தரபாண்டியனார், வி.வி.ராமசாமி, பூவாளுர் பொன்னம்பலனார், கி.ஆ.பெ.விசுவநாதம், சாமி.சிதம்பரனார் ஆகியோர், 1945-ஆம் ஆண்டில் ‘சுயமரியாதைச் சங்கம்’ என்கிற பெயரில் பதிவு செய்து இயங்கினர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

682

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131